**பிறப்பட்டி டெவலப்மென்ற் பிஎல்சீ - 2020**

## 1.1 அபிப்பிராயம்

பிறப்பட்டி டெவலப்மென்ற் பிஎல்சீயினதும் (''கம்பனி'') மற்றும் அதன் துணைக் கம்பனியினதும் (''தொகுதி'') 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காய்வாளர் நிறுவனம் ஒன்று எனக்கு உதவியது.

கம்பனியினதும் தொகுதியினதும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தொகுதி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது தொகுதியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியினதும் தொகுதியினதும் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் தொகுதியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தெகுதியானது அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள்

போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத்திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொகுதியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- தொகுதியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்;

- பொருத்தமான எழுத்து மூலமான சட்டம், அல்லது தொகுதியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புக்களுடன் தொகுதி இணங்கியொழுகியிருந்ததா என்பதும்;

- தொகுதி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும்; மற்றும்

- தொகுதியின் வளங்கள் காலவரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் பட்டியல் விதி இலக்கம் 7.13.1(அ) இன் படி | பொது மக்கள் வைத்திருக்க வேண்டிய குறைந்த பட்ச 20 சதவீத தேவைப்பாட்டுடன் கம்பனி இணங்கவில்லை. | நிறுவனம் 21 மார்ச் 2014 இல் தனது பட்டியலிருந்து நீங்கும் செயன் முறையைத் தொடங்கியது மற்றும் பட்டியலிருந்து நீங்கும் செயன் முறையின் சிக்கலான தலைமை மற்றும் பங்குதாரர்களின் ஒப்புதலைப் பெற இயலாமை ஆகியவை | பட்டியலிருந்து நீங்கும் செயன்முறையை துரிதப்படுத்துவதற்கு பரிந்துரை செய்யப்படுகின்றது. |

தாமதமாகின்றன. இப்போது நிறுவனம் தனது சொந்த பங்குகளை பங்குதாரர் மூலம் பட்டியலிருந்து நீங்கும் செயன் முறையை மீண்டும் தொடங்கியுள்ளது.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வு ஆண்டிற்கான தொழிற்பாட்டு விளைவு ரூபா 474 மில்லியன் இலாபத்தினை காட்டுவதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான இலாபமானது ரூபா 696 மில்லியன். எனவே, நிதி முடிவுகளில் ரூபா 222 மில்லியன் சரிவு காணப்பட்டது. வருவாய், இதர செயற்பாட்டு வருமானம் மற்றும் நிதி வருமானம் முறையே 3.6 சதவீதம் 38.5 சதவீதம் மற்றும் 27.8 சதவீதம் குறைந்துள்ளதுடன் குறைபாடு இழப்பு 100 சதவீதம் அதிகரித்தமையே மீளாய்வு ஆண்டின் நிதி விளைவுகளின் சரிவுக்கான முக்கிய காரணங்களாகும்.

### 2.2 முக்கிய வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டின் முக்கிய வருமானம் மற்றும் செலவு விடயங்களின் பகுப்பாய்வானது அதிகரிப்பு அல்லது குறைவின் சதவீதத்துடன் கீழே தரப்பட்டுள்ளது.

| விபரம் | வேறுபாட்டு தொகை அதிகரிப்பு / (குறைவு) (ரூபா.) | வேறுபாடு % | வேறுபாட்டுக்கான காரணம் |
|---|---|---|---|
| வருமானம் | (30,410,356) | (3.6) | கொவிட் - 19 தொற்று காரணமாக 2020 ஏப்ரல் 01 முதல் செப்டெம்பர் 30 வரையிலான காலப்பகுதியில் இலங்கை வங்கிக்கு வழங்கப்பட்ட வாடகை கட்டணமான ரூபா.96,944,202 வருமானம் 3.6 சதவீதத்தால் குறைவடைந்தமையே முக்கிய காரணம். |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | (76,647,924) | (38.5) | இதர வருமானம் மற்றும் துணை நிறுவனங்களிலிருந்து பெறப்படும் பங்கிலாப வருமானம் முறையே 73 சதவீதம் மற்றும் 30 சதவீதம் குறைந்தமையே ஏனைய செய்றபாட்டு வருமானம் 38.5 சதவீதம் குறைந்தமைக்கு முக்கிய காரணமாகும். |
| நேர்ச் செலவுகள் | (20,402,369) | (12.9) | பராமரிப்புச் செலவுகளில் ஏற்பட்ட 38.4 சதவீதக் குறைவே நேரடிச் செலவுகளில் 12.9 சதவீதம் குறைவுக்கு முக்கிய காரணமாகும். |

| | | | |
|---|---|---|---|
| சொத்து ஆலை மற்றும் உபகரணங்கள் / நண்பதிப்பு / துணை நிறுவனங்களின் முதலீடு ஆகியவற்றின் குறைபாட்டு இழப்பு | 71,160,503 | 100 | துணை நிறுவனமான கொலதெனிய ஹைட்ரோவர் (பிரைவட்) லிமிடடின் முதலீடு குறைபாடு உள்ளதா என சோதிக்கப்பட்டது. மற்றும் முதலீட்டின் புத்தகப் பெறுமதி அதன் மீட்டெடுக்கக் கூடிய தொகையை விட அதிகமாக இருப்பதாக தீர்மானிக்கப்பட்டது. இதன் விளைவாக நிறுவனம் ரூபா.71,160,503 குறைபாட்டுக் கட்டணத்தை அங்கீகரித்துள்ளது. |
| நிதிச் செலவு | (66,393,429) | (27.8) | நிலையான வைப்பின் மீதான வட்டி கடனீட்டுப் பத்திரங்களின் மீதான வட்டி வருமானம் மற்றும் உரிமை மூலதன பாதுகாப்பு பத்திரங்கள் மீதான பங்கிலாப வருமானம் முறையே 10 சதவீதம் மற்றும் 100 சதவீதம் மற்றும் 99.9 சதவீதம் குறைந்தமையே நிதி வருமானம் 27.8 சதவீதம் குறைய முக்கிய காரணமாகும். |

**2.3 விகிதப் பகுப்பாய்வு**

கிடைக்கக்கூடியதாக இருந்த தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டினதும் அதற்கு முன்னைய ஆண்டினதும் கம்பனியின் குறிப்பிடத்தக்க முக்கியமான விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **கணக்கீட்டு விகிதம்** | **2020** | **2019** |
|---|---|---|
| தேறிய இலாப விகிதம் (%) | 84 | 105 |
| மொத்தச் சொத்துக்களின் மீதான திரும்பல் (%) | 14 | 20 |
| உரிமை மூலதனம் மீதான திரும்பல் (%) | 17 | 24 |
| நடைமுறை விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 14.5:1 | 21:1 |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டில் அனைத்து விகதங்களும் மோசமடைந்ததை அவதானிக்க முடிந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (i) | கொழும்பு பங்குச் சந்தையின் 7.13.1 பட்டியலிடுதல் விகிதங்களுக்கு இணங்காமையினால் நிறுவனம் 21 மார்ச் 2014 இல் அதன் பட்டியலிருந்து நீங்கும் செயல் முறையைத் தொடங்கியது. நீங்குதல் செயல் முறையில் நிலவிய சிக்கலான தன்மை மற்றும் நீக்குதலுக்கான பங்குதாரர்களின் ஒப்புதலைப் பெற இயலாமை காரணமாக இது ஏழு ஆண்டுகளுக்கும் மேலாக தாமதமாகியது. இணங்காமைக்கான அறிவிப்பு 07 ஜுலை 2020 இல் CSE க்கு சமர்ப்பிக்கப்பட்டது. தற்போது நிறுவனம் பங்குகளை திரும்ப வாங்குவதன் மூலம் சட்டபூர்வமாக நிறுவனத்தை பட்டியலிருந்து நீங்கும் தேவைகளை நிறைவேற்றும் பணியில் ஈடுபட்டுள்ளது. | • 2014 மார்ச்சில் பட்டியலிருந்து நீங்கும் செயல் முறை தொடங்கப்பட்டாலும் பெரிய பங்குதாரர் அதாவது இலங்கை வங்கி (BOC) மேற்கூறிய பட்டியல் விதிக்கு இனங்குவதற்கான விருப்பங்களை மதிப்பீடு செய்ய வேண்டியிருப்பதால் அதற்கு இணங்க முடிவெடுக்க நேரம் எடுத்தது. மற்றும் அதிகாரிகளிடமிருந்து தேவையான அனுமதிகைப் பெற வேண்டும்.<br><br>• இறுதியாக 2018 இன் தொடக்கத்தில் வெளியேறும் சலுகை விளைவுடன் பட்டியலிருந்து நீங்கும் செயல் முறையைத் தொடங்குமாறு BOC நிறுவனத்திற்கு அறிவுறுத்தியது. இலங்கைப் பத்திரங்கள் மற்றும் பரிவத்தனை ஆணைக்குழுவின் (SEC) பட்டியலிருந்து நீங்கும் விதி 5 ஐப் பின்பற்றுவதன் மூலம் பட்டியலிருந்து நீங்குவதற்கு பங்குதாரர்களின் ஒப்புதலைப் பெற நிறுவனம் 2018 ஏப்ரல் 04 ஆம் திகதி அன்று ஒரு அசாதாரண பொதுக் கூட்டத்தைக் கூட்டியது. எவ்வாறாயினும், SEC இன் விதி 5 இன் கீழ் தேவைப்படும் பங்குதாரர்களின் ஒப்புதலைப் பெறுவதில் நிறவனம் வெற்றி பெறவில்லை.<br><br>• எனவே, பங்குதாரர் மேலே உள்ள பட்டியல் விதிக்கு இணங்குதல் தொடர்பான முக்கிய சட்டங்களின் கீழ் கிடைக்கும் அனைத்து விபரங்களையும் மறு மதிப்பீடு செய்துள்ளனர். ஒரு முடிவை எடுப்பதற்கு முன் BOC க்கு கிடைக்கக் கூடிய சிறந்த விருப்பதைத் தீர்மானிப்பதில் இது மிகவும் சிக்கலான செயல் முறையாகும் என்பதை நீங்கள் பராட்டுவீர்கள். | நீங்கும் செயல் முறையை விரைவுபடுத்த பரிந்துரைக்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | | • நிறுவனத்தால் சொந்த பங்குகளை வழங்குவதன் மூலம் பட்டியலிருந்து நீங்கும் செயல் முறையை மீண்டும் தொடங்குவதற்கு முக்கிய பங்குதாரர் இப்போது நிறுவனத்திற்கு அறிவுறுத்தியுள்ளார்.<br>• நிறுவனம் இப்போது பங்குகளை திரும்ப வாங்குவதன் மூலம் நிறுவனத்தை பட்டியலிருந்து நீங்கும் சட்டபூர்வ தேவைகளை நிறைவேற்றும் செயற்பாட்டில் உள்ளது. நிறுவனம் கொழும்பு பங்குச் சந்தைப் பட்டியலின் விதி 7.11.1 நிறுவனச் சட்டத்தின் பிரிவு 64 மற்றும் இலங்கையின் பாதுகாப்பு மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவில் விதி 5 ஆகியவற்றுக்கு இணங்க வேண்டும்.<br>• மேற்கண்ட பட்டியல் விதிக்கு இணங்காத 29 பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள் நாட்டில் உள்ளன என்பதைக் குறிப்பிடுவது பொருத்தமானது. | |
| (ii) | இலங்கை வங்கியிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளின் படி 2020 ஏப்ரல் முதல் 2020 செப்டெம்பர் வரையிலான காலப்பகுதியில் BOC தலைமையக கட்டிடத்தின் வாடகைக் கட்டணத்தை ஒரு சதுர அடிக்கு ரூபா 124 இருந்து ரூபா 97 ஆக குறைக்க நிறுவனத்தின் இயக்குநர் குழு ஒப்புதல் அளித்தது. இந்த முடிவின் காரணமாக நிறுவனம் மதிப்பாய்வாண்டின் 2020 ஏப்ரல் 01 முதல் 2020 செப்தெம்பா 30 வரையிலான காலக்கட்டத்தில் ரூபா.96,944,202 வாடகை வருமானத்தை | பதில் அளிக்கப்படவில்லை. | முடிவெடுக்கும் போது இலங்கை வங்கி மற்றும் கம்பனி ஆகிய இரு தரப்பினரின் நிதி நிலைமைகள் மீது ஆழமான மதிப்பீடு மற்றும் தாக்க பகுப்பாய்வு செய்ய பரிந்துரைக்கப்படுகின்றது. |

இழந்துள்ளது. மற்றும் நிறுவனத்தின் வருமானம் 3.6 சதவீதம் குறைவதற்கு இதுவே முக்கிய காரணமாகும்.

**3.2** திட்டங்கள் மற்றும் மூலதன வேலைகளில் தாமதம் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட முக்கிய வேலைத் திட்டங்கள் இலக்குகள் மற்றம் 2020 ஆம் ஆண்டுகளை நிறுவனம் நிகழ்த்திய உண்மையான பணிகள் ஆகியவற்றுக்கு இடையே கணிசமான விலகல்கள் காணப்பட்டன. விபரங்களுக்கு இணைப்பு 1 ஐப் பார்கவும்.

**3.3** **மனிதவள முகாமைத்துவம்**

**கணக்காய்வு விடயம்**

2020 டிசம்பர் 31 இல் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி மற்றும் உண்மையில் உள்ள ஆளணி விபரத்திற்கு இடையில் பின்வரும் வேறுபாடுகள் காணப்பட்டன. தற்போதுள்ள காலியிடங்களுக்கு பொருத்தமான நபர்களை நியமிக்க நிறுவனத்தால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

| **பிரிவு** | **ஆங்கீகரிக்கப்பட்ட ஆளணி** | **31.12.2020 இல் உள்ளபடியான ஆளணி** | **வெற்றிடங்கள்** |
|---|---|---|---|
| நிறைவேற்று பதவியணியினர் | 15 | 12 | 03 |
| பராமரிப்பு பிரிவு | 61 | 57 | 04 |
| நிதிப் பிரிவு | 18 | 16 | 02 |
| மனிதவள மற்றும் நிர்வாக பிரிவு | 16 | 14 | 02 |
| கொள்வனவு பிரிவு | 03 | - | 03 |
| | **113** | **99** | **14** |

**முகாமையின் கருத்துரை**

**நிறைவேற்று பதவியணியினர்**

பின்வரும் வெற்றிடங்கள் கொடுக்கப்பட்ட திகதியில் நிறப்பப்பட்டன;

துணை பராமரிப்பு முகாமையாளர்கள் மற்றும் பொறியியல் உதவியாளர் 2021 பெப்ரவரி 15 அன்று பணியமர்த்தர்ப்பட்டனர். எனவே, இன்று வரை ஒரு ஆளணி வெற்றிடமே உள்ளது. அதாவது கணக்காளர் பதவியினை உள் பதவி உயர்வின் மூலம் நிரப்ப நிர்வாகம் உத்தேசித்துள்ளது.

**நிறைவேற்றல்லாத பதவியணியினர்**

**பராமரிப்பு துறை**

2020 ஒக்டோபரில் வெற்றிடங்களை நிரப்புவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு பொருத்தமான விண்ணப்பதாரர்கள் கிடைக்காதால் தோல்வியடைந்தது. நிர்வாகம் 2021 ஏப்ரல் இல் அதையே ஆட்சேர்ப்பு செய்ய முயற்சித்தது. ஆனால் பொருத்தமான வேட்பாளர்களை கண்டுபிடிக்க முடியவில்லை. மேலும் கொவிட் 19

**பரிந்துரை**

ஏற்கனவே உள்ள வெற்றிடங்களை நிரப்ப பரிந்துரைக்கப்படுகின்றது.

தொற்றுநோய் காரணமாக வெற்றிடங்களை நிரப்ப எங்களால் இயலவில்லை. தற்போது அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**நிதித்துறை**

----------------

தேவைப்பாட்டுக்கேற்ப வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

**மனிதவள மற்றும் நிர்வாகத்துறை**

--------------------------------------------

தேவைக்கேற்ப வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

**இணைப்பு – 01**

| திட்டத்தின் பெயர் | 2020 டிசம்பர் 31 இல் முழு பாதீடு (ரூபா.மில்) | கால இலக்கு<br>வேலை தெடங்கும் ஆரம்ப திகதி | ஆரம்பத்தில் வேலையை முடிக்க எதிர்பார்க்கப் பட்ட திகதி | வேலையை முடிக்க கனிசமாக எதிர்பார்க்கப் பட்ட திகதி | உண்மையில் தொடங்கிய திகதி | விலகல்கள் | முகாமைத்துவ கருத்துரை |
|---|---|---|---|---|---|---|---|
| AHUs, கட்டுப்பாட்டு அமைப்புக்கள், மத்திய கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு அமைப்பு ஆகியவற்றின் மோட்டார் பொருத்தப்பட்ட வால்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல். | 15 | 22 ஒக்டோதபர் 2020 | 20 மே 2021 | 30 யூன் 2022 | 12 ஜனவரி 2021 | எதிர்பார்க்கப்பட்ட ஆரம்ப திகதிக்கும் கணிசமான மதிப்பிடப்பட்ட வேலை முடிக்கும் திகதிக்கும் இடையே 406 நாட்கள் தாமதம் காணப்பட்டது. ரூபா 5.286 மில்லியன் மட்டுமே பயன்படுத்தப்பட்டு பணிகள் நடை பெற்று வருகின்றன. | நாட்டில் நிலவும் கொவிட் - 19 சூழ்நிலை காரணமாக ஒப்பந்தக்காரர்கள் பின்வரும் காலங்களில் BOC தலைமையகக் கட்டிடத்தின் வளாகத்திற்குள் நுழைய அனுமதிக்கப்படவில்லை.<br>25 நவம்பர் 2020 – 22 திசெம்பர் 2020<br>10 பெப்ரவரி 2021 – 25 மார்ச் 2021<br>28 ஏப்ரல் 2021 – 19 யூலை 2021 |
| 4 ஆவது மாடியில் எயார் எக்ஸ்ட்ராக் /எகஸாஸ்டர் பேன் வழங்கல் மற்றும ·நிறுவுதல் | 6 | 28 திசெம்பர் 2020 | 27 மே 2021 | 12 யூலை 2021 | 12 பெப்ரவரி 2021 | எதிர்பார்க்கப்பட்ட ஆரம்ப திகதிக்கும் கணிசமான மதிப்பிடப்பட்ட வேலை முடிக்கும் திகதிக்கும் இடையே 46 நாட்கள் தாமதம் காணப்பட்டது. | நாட்டில் நிலவும் கொவிட் - 19 சூழ்நிலை காரணமாக ஒப்பந்தக்காரர்கள் பின்வரும் காலங்களில் BOC தலைமையகக் கட்டிடத்தின் வளாகத்திற்குள் நுழைய அனுமதிக்கப்படவில்லை. |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | முழு வேலை முடிவிற்கு ரூபா 2.977 மில்லியன் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. மற்றும் மொத்த பாதீட்டில் ரூபா 3.023 மில்லியன் குறைவாக பயன்படுத்தப்பட்டுள்ளது. | 10 பெப்ரவரி 2021<br>28 ஏப்ரல் 2021 | 25 மார்ச் 2021<br>19 யூலை 2021 |
| அடித்தளம் 2 இல் குழாய் பொருத்தப்பட்ட புதிய காற்று ஊது குழலை வழங்குதல் மற்றும் நிறுவுதல் | 4.6 | 03 ஜனவரி 2020 | 03 மே 2020 | 30 செப்தெம்பர் 2020 | 10 ஜனவரி 2020 | எதிர்பார்க்கப்பட்ட ஆரம்ப திகதிக்கும் கணிசமான மதிப்பிடப்பட்ட வேலை முடிக்கும் திகதிக்கும் இடையே 150 நாட்கள் தாமதம் காணப்பட்டது. 2020 ஆம் ஆண்டில் ரூபா 2.278 மில்லியன் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. மற்றும் வரவு செலவுத் திட்டத்தில் ரூபா 2.322 மில்லியன் குறைவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. | நாட்டில் நிலவும் கொவிட் - 19 சூழ்நிலை காரணமாக ஒப்பந்தக்காரர்கள் பின்வரும் காலங்களில் BOC தலைமையகக் கட்டிடத்தின் வளாகத்திற்குள் நுழைய அனுமதிக்கப்படவில்லை.<br>20 மார்ச் 2020<br>29 யூன் 2020 | 02 யூன் 2020<br>01 செப்தெம்பர் 2020 |
| 1&3 மாடிகளில் உள்ள மர உச்ச வரம்பை அலுமினியம் கலந்த பேனல் உச்ச வரம்பாக (Ceiling) மாற்றுதல் | 12 | 13 ஒக்டோபர் 2020 | 10 பெப்ரவரி 2021 | 31 திசெம்பர் 2021 | 20 ஏப்ரல் 2021 | எதிர்பார்க்கப்பட்ட ஆரம்ப திகதிக்கும் கணிசமான மதிப்பிடப்பட்ட வேலை முடிக்கும் திகதிக்கும் இடையே 324 நாட்கள் தாமதம் காணப்பட்டது. | நாட்டில் நிலவும் கொவிட் - 19 சூழ்நிலை காரணமாக ஒப்பந்தக்காரர்கள் பின்வரும் காலங்களில் BOC தலைமையக கட்டிடத்தின் வளாகத்திற்குள் நுழைய அனுமதிக்கப்படவில்லை. | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | 25 ஒக்டோபர் 2020 25 மார்ச் 2021<br>28 ஏப்ரல் 2021 19 யூலை 2021 |
| 1&2 ஆம் தளங்களில் லொபிகளை உயர்த்துவதற்றான புதுப்பித்தல் | 11 | 20 மார்ச் 2020 | 16 செப்தெம்பர் 2020 | 30 யூன் 2021 | 07 செப்தெம் பர் 2020<br>06 ஏப்ரல் 2021<br>02 செப்தெம் பர்2021 | எதிர்பார்க்கப்பட்ட ஆரம்ப திகதிக்கும் கணிசமான மதிப்பிடப்பட்ட வேலை முடிக்கும் திகதிக்கும் இடையே 287 நாட்கள் தாமதம் காணப்பட்டது.<br>2020 ஆம் ஆண்டில் ரூபா 1.896 மில்லியன் மட்டுமே பயன்படுத்தப்பட்டது. | நாட்டில் நிலவும் கொவிட் - 19 சூழ்நிலை காரணமாக ஒப்பந்தக்காரர்கள் பின்வரும் --- கட்டிடத்தின் வளாகத்திற்குள் நுழைய அனுமதிக்கப்படவில்லை.<br>20 மார்ச் 2020 26 ஆகஸ்ட் 2020<br>25 ஒக்தோபர் 2020 25 மார்ச் 2021<br>28 ஏப்ரல் 2021 19 யூலை 2021 |
| கூரையில் மழை நீர் வடிகால் நீர்ப்பு காப்பு | 04 | 20 மார்ச் 2020 | 19 மே 2020 | - | மழைக்க ாரணமாக இன்னும் வேலை ஆரம்பிக் கப்பட வில்லை. | 2020 மார்ச் 20 முதல் 2021 அக்டோபர் 30 வரை 590 நாட்கள் தாமதம் காணப்பட்டது. ஆனால் இது வரை பணிகள் தொடங்கவில்லை. | - |
| அடித்தளம் 2 இலிருந்து 17 ஆவது மாடிக்கு 11 KV மின் கேபிளை மாற்றுதல் | 10 | - | - | - | - | வேலை இன்னும் தொடங்கவில்லை. | - |
| இலங்கை வங்கியின் தலைமையக கட்டிடத்திற்கான | 60 | 17 ஆகஸ்ட் 2020 | 12 யூலை 2021 | 31 மே 2021 | 14 செப்தெம் பர் 2020 | ரூபா 13.706 மில்லியன் மட்டுமே பயன்படுத்தப்பட்டு | நாட்டில் நிலவும் கொவிட் - 19 சூழ்நிலை காரணமாக ஒப்பந்தக்காரர்கள் பின்வரும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எனலாக் முகவரியிடக் கூடிய தீ கண்டறிதல் மற்றும் அலாரம் அமைப்பு மற்றும் இரு வழி தீயனைப்பு வீரர்கள் தொலைபேசி தொடர்பு அமைப்பு ஆகியவற்றின் குறைபாடு பொறுப்புக் காலத்தில் வழங்கல், நிறுவுதல், சோதனை செய்தல், ஆணையிடுதல் மற்றும் பராமரித்தல் . | | பணிகள் நடைபெற்று வருகின்றன. | காலங்களில் BOC தலைமையக கட்டிடத்தின் வளாகத்திற்குள் நுழைய அனுமதிக்கப்படவில்லை. | 22 ஒக்டோபர் 2020 | 23 நவம்பர் 2020 |
| | | | | 26 நவம்பர் 2020 | 22 திசெம்பர் 2020 |
| | | | | 28 ஏப்ரல் 2021 | 7 யூலை 2021 |